Commission's glossary. If for any technical and legal term there is no suitable Tamil equivalent in use, the equivalent given in the standard glossary shall be transliterated in Tamil. In cases where there is a suitable Tamil equivalent in use, the transliterated standard term might be shown within brackets, for the information of those persons who might be handling the statutes, rules, etc., in both Tamil and Hindi or other Indian languages.

(c) The matter is under consideration.

மாணவர் விடுதிகள், திருச்சி மாவட்டம்

** 478. கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1964-65-ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் அரசினர் மாணவர் விடுதிகள் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : There are no proposals for construction of hostels in Tiruchirappalli district during 1964–65. The question of constructing a building for the Government Korava Boarding Home at Pudukkottai during 1964–65 is, however, under the consideration of the Government.

திருச்சி மாவட்டத்தில் 1964-65-ல் மாணவர் விடுதிகள் கட்டும் எண்ணம் இல்லை. ஆயினும் புதுக்கோட்டையில் 1964-65-ல் அரசினர் குறவர்கள் உணவு விடுதிக்காகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, ஆலங்குடி அரசினர் மாணவர் விடுதிகளில் இடநெருக்கடியால் வியாதி வந்து மாணவர்கள் விடுதிகளை விட்டு நாளுக்கு நாள் வெளியேறுகிறார்கள் என்பதனால், அதைக் கவனித்து ஆவன செய்ய சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாணவர்கள் ஹாஸ்டலை விட்டு நாளுக்கு நாள் வெளியே போக மாட்டார்கள். திருச்சியில் குறவர் விடுதிக்காக கட்டடம் கட்ட இருப்பதால், அது ஆலங்குடி, புதுக்கோட்டை மாணவர்களுக்கும் வசதியாக இருக்கும்.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், மாணவர்கள் வெளியேறவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் இந்த புகாரை புதுக்கோட்டையிலும் ஆலங்குடியிலும் வியாதியால் பீடிக்கப்பட்டு வெளியேறுகிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். ஆகவே அதில் பிரத்தியேகக் கவனம் செலுத்த சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : சபாநாயகர் அவர்களே அது மாதிரி கலெக்டரிடமிருந்தோ, அரிஜன நல இலாகா அதிகாரியிடமிருந்தோ அப்படி ஒரு தகவலும் இல்லை. கனம் அங்கத்தினர் அதுபற்றி எழுதி அனுப்பினால் நான் கவனிக்க முடியும்.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, அரந்தாங்கி வட்டம் மணமேல்குடியில் ஒரு ஹாஸ்டல் வேண்டும் என்று மாவட்ட குழுவில் தீர்மானம்கூட நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கே மாணவருக்கு ஒரு இல்லம் அமைக்க ஏற்பாடு செய்யப் படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: மாணவர் விடுதி வேண்டும் என்று கனம் அங்கத்தினர் குறிப்பிடும் இடம் பற்றி எந்தவிதமானத் தகவலும் என்னிடம் இல்லை.

திரு. வை. சங்கரன்: மாநிலத்தில் வேறு எந்த இடத்திலாவது மாணவர்கள் விடுதி கட்ட சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: திருவாடானை யில் ஒரு மாணவர் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், எமர்ஜன்ஸி காரண மாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார் கள். வரப்போகிற கல்வி ஆண்டிலாவது அதை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: எமர்ஜன்ஸி போன பிற்பாடு அதைப் பற்றி யோசிக்கப்படும்.

திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'இந்த ஆண்டிலே மாணவர்கள் விடுதி கட்ட முடியாது' என்று சொன்னார்கள். இருந்தாலும், திருச்சி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில், சில இடங் களில் மாணவர்கள் விடுதிகள் கட்டப்படவேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அதற்கு இனிமேலாவது அரசாங்கம் ஆவன செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: வருங்காலத்தில், அரசாங்கத்தின் நிதி நிலைக்குத் தக்கவாறு எந்த எந்த இடங்களில் எந்த ஹாஸ்டலைக் கட்டுவது நல்லது என்பதைப் பின்னால் யோசிக்கலாம். இப்போதே ஒன்றும் சொல்வதற்கில்லை.

எண்ணெய் சுத்தகரிப்பு ஆலை

* 479 கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: } கனம்
திரு. கே. மதியழகன்: }

கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(இ) இத் திட்டத்திற்காக மத்திய சர்க்காரும் மாநில சர்க் காரும் ஒதுக்கிய தொகை எவ்வளவு?